[2013 ஏப்ரல் 23

மாண்புமிகு திரு. செ. தாமோதரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தியூர் வட்டாரத்தைப் பொறுத்தவரையிலே, காய்கறிகள் மற்றும் பழங்கள் 664 ஹெக்டேர் பரப்பளவில் பயிரிடப்படுகின்றன. அந்தியூரிலிருந்து 35 கிலோ மீட்டர் தொலைவில் உள்ள கோபிசெட்டிபாளையத்தில்கூட 1,000 மெட்ரிக் டன் கொள்ளளவிலே குளிர்பதன வசதி கொண்ட கிடங்கும், வணிக வளாகமும் அமைக்கப்பட்டு வருகின்றன. சத்தியமங்கலத்திலும் 100 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட குளிர்பதனக் கிடங்கு, தேசிய வேளாண்மை வளர்ச்சித் திட்டத்தின்கீழ் கட்டப்பட்டு வருகிறது. அப்பணிகள் தற்போது முடிவடையும் நிலையில் இருக்கின்றன. பணிகள் முடிவடைந்தவுடன், மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் குறிப்பிட்ட பகுதியில் இருக்கின்ற விவசாயிகள் அதைப் பயன்படுத்திக்கொள்ளலாம். அதைவிட அதிகமாக தேவை இருப்பின், அதுபற்றி ஆராய்ந்து பின்னர் பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.எஸ். ரமணீதரன் அவர்கள்.*

திரு. எஸ்.எஸ். ரமணீதரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், என்னுடைய கோரிக்கை பரிசீலிக்கப்படுமென்று சொன்னார்கள். மாண்புமிகு அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் நன்றி கூறி அமைகின்றேன்.*

(ஆ) குறுகிய கால வினா

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *குறுகிய கால வினா எண் 1, மாண்புமிகு உறுப்பினர் திரு. என். முருகுமாறன், மாண்புமிகு பள்ளிக் கல்வி, விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

1—

மகளிர் உயர்நிலைப் பள்ளி

***34798—திரு. என். முருகுமாறன்:**

மாண்புமிகு பள்ளிக் கல்வி, விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

2013 ஏப்ரல் 23]

(அ) காட்டுமன்னார்கோவில் தொகுதி, லால்பேட்டை பேரூராட்சியில் பெண்களுக்கென புதிய மகளிர் உயர்நிலைப் பள்ளி அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு முனைவர் வைகைச்செல்வன், பள்ளிக் கல்வி, விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) கடலூர் மாவட்டம், காட்டுமன்னார்கோவில் தொகுதியில் சிறுபான்மை இஸ்லாமியர்கள் நிறைந்து வாழ்கிறார்கள். லால்பேட்டை பேரூராட்சியில் பெண்களுக்கு தனியே உயர்நிலைப் பள்ளி இல்லாததாலும், பெண்கள் உயர்நிலைப் பள்ளி தொடங்கினால் மாணவிகள் தங்கள் படிப்பைப் பாதியில் நிறுத்தாமல், மேற்படிப்பைத் தொடர முடியும் என்பதாலும், லால்பேட்டை பேரூராட்சியில் உள்ள அரசு மேல்நிலைப் பள்ளியிலிருந்து மகளிரைப் பிரித்து, புதிய அரசினர் மகளிர் உயர்நிலைப் பள்ளி தொடங்குவது குறித்த கருத்துரு பெறப்பட்டுள்ளது. மாண்புமிகு இதய தெய்வம் தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய நல்லரசு இந்தக் கோரிக்கையைக் கனிவுடன் பரிசீலனை செய்து வருகிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. என். முருகுமாறன் அவர்கள்.

திரு. என். முருகுமாறன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'என்ன கொடுப்பான், ஏது கொடுப்பான், பொன்னைக் கொடுப்பான், பொருளைக் கொடுப்பான்; போதாது, போதாது என்றால், இன்னும் கொடுப்பான்' அவன்தான் கொடைவள்ளல், கர்ணன் என்று சொல்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கேட்டால்தான் கொடுப்பான் கர்ணன்; கேட்காமலேயே தமிழக மக்களுக்கு வாரி, வாரி வழங்குகிற வள்ளலாக, (மேசையைத் தட்டும் ஒலி) இன்றைய தமிழகத்தின் காவலராக, நாளைய இந்தியப் பேரரசின் காவலராக விளங்கப் போகிற மாட்சிமை பொருந்திய தமிழ்நாட்டின் முதலமைச்சர் (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய புனித மலர்ப் பாதங்களைப் பணிவோடு வணங்குகிறேன்.

கடலூர் மாவட்டம், காட்டுமன்னார்கோவில் வட்டத்திலே அமைந்திருக்கிற லால்பேட்டை பேரூராட்சி, சிறுபான்மையின இஸ்லாமிய மக்கள் பெரும்பான்மையாக வசிக்கக்கூடிய பகுதி. அங்கு பெண்கள் பள்ளிக்கு வருவது மிகவும் அரிது. ஆனால், இன்றைக்கு மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தமிழ்நாட்டை ஆளுகிறார்கள் என்பதற்காகவும், பள்ளிக் கல்வித் துறையிலே காலணியிலிருந்து மடிக்கணினி வரை இலவசமாக மாணவ, மாணவர்களுக்கு வழங்குகிறார்கள் என்பதற்காகவும், இன்றைக்கு பெண்களுக்கு முழுப் பாதுகாப்பு தமிழகத்தில் இருக்கிறது என்பதற்காகவும் (மேசையைத் தட்டும் ஒலி) லால்பேட்டையில் பெண்கள் படிக்க வேண்டுமென்று விரும்புகிறார்கள். அந்தப் பகுதி மக்களுடைய ஏக்கத்தைப் போக்குகின்ற வகையில், அரசு பரிசீலனை செய்யும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். இந்த ஆண்டு அதற்கான வாய்ப்பு உண்டா என மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவிப்பார்களா எனத் தங்கள்மூலம் கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பள்ளிக் கல்வி, விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு முனைவர் வைகைச்செல்வன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, லால்பேட்டை, இஸ்லாமியர்கள் அதிகமாக வாழ்கிற பகுதி.* Sallallahu Alaihi Wasallam—*அண்ணல் முகமது நபி அவர்கள் சொல்வார்கள், 'தாயின் பாதங்களில்தான் சொர்க்கம் இருக்கிறது' என்று. (மேசையைத் தட்டும் ஒலி) அதைப்போல, கருணையும், ஈரமும், வீரமும் மிக்க எங்கள் தாயினுடைய கருணையால், இவ்வாண்டே அந்தப் பள்ளி தொடங்குவதற்கான வாய்ப்பிருக்கிறது, பரிசீலனையில் இருக்கிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள்வாயிலாக உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. என். முருகுமாறன் அவர்கள்.*

திரு. என். முருகுமாறன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விண்ணப்பம் வைக்கும்முன்பே விடை தருகிற மாட்சிமை பொருந்திய தமிழ்நாட்டின் முதலமைச்சர் ஆளுகிற இந்தப் பொற்கால ஆட்சியில், (மேசையைத் தட்டும் ஒலி)*

2013 ஏப்ரல் 23]

சிறுபான்மையின மக்களுடைய பாதுகாவலராக விளங்குகிற மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆட்சியில், லால்பேட்டை நன்நகரில் இஸ்லாமிய பெருமக்களின் ஏக்கங்களைப் போக்குகிற வகையிலே, இந்த ஆண்டே மகளிர் பள்ளி தொடங்கப்படும் என அறிவித்த மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் புனித மலர் பாதங்களுக்கும், மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்களுக்கும், தங்கள்வாயிலாக, என் சார்பாகவும், தொகுதி மக்களின் சார்பாகவும், லால்பேட்டை பகுதிவாழ் ஜமாத்தார்கள் சார்பாகவும், இஸ்லாமிய பொதுமக்கள் சார்பாகவும், கோடானு கோடி நன்றியைச் சமர்ப்பித்து, விடைபெறுகிறேன். வணக்கம்.

முற்பகல் 10-35

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினாக்கள்-விடைகள் நேரம் முடிவுற்றது.*

[**குறிப்பு:** *ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடம்பெற்றிருந்தால், அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.*]

2. மானியக் கோரிக்கைகள், 2013–2014, விவாதமும் வாக்கெடுப்பும்—*தொடர்ச்சி*

(அ) கோரிக்கை எண் 22–காவல் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை)

(ஆ) கோரிக்கை எண் 23–தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை)

- - -

(அ) கோரிக்கை எண் 22–காவல் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *2013-2014 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கைகளின்மீது விவாதமும், வாக்கெடுப்பும். மானியக் கோரிக்கை எண் 22-காவல் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை). மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் பலத்த ஒலி)*